## இயல் 8.2 - நீங்கள் நல்லவர்

### அ) குறுவினா

1. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?

விடை:  பழத்தின் இயல்பு கொடுப்பது; வேரின் இயல்பு பெறுவது.

2. உழைக்கும்போது என்னவாக ஆகிறோம்?

விடை:  உழைக்கும் போது நாம் புல்லாங்குழலாகிறோம்.

### ஆ) சிறுவினா

1. நீங்கள் நல்லவர் என்னும் இப்பாடல் விளக்கும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

   விடை:

- **நீங்கள் நல்லவர் என்னும் பாடல் விளக்கும் கருத்துகள் :**
  காலம் மாறிக்கொண்டேதான் இருக்கும். வயது முதிர்ந்தவர் தன் இளம் வயதிற்குத் திரும்பிச் செல்லவியலாது. நேற்று நடந்தது இன்று நடைபெறாது. சிறகுகள் காற்றின் வேகத்திற்குச் சமமாக எழுவது போல் நாம் செயலாற்ற வேண்டும்.

- நீங்கள் உழைக்கின்றபோது புல்லாங்குழலைப் போன்று மாறிவிடுகிறீர்கள். புல்லாங்குழல் அந்தந்தக் காலத்தில் நடைபெறுவனவற்றை ஓரிசையாக மாற்றிவிடுகிறது. உங்களிடம் உள்ள நன்மையைப்

பற்றித்தான் பேசமுடியும். தீமைகளைப் பற்றி பேசக்கூடாது.

- நீங்கள் சுயசிந்தனையுடன் ஒன்றுபட்டு இருக்கும்போது நல்லவராக இருக்கின்றீர்கள். என்னைப் போலவே இரு. உன்னிடம் உள்ள எல்லாவற்றையும் முழுமையும் கொடு என்று பழம் வேரைப் பார்த்து நிச்சயமாய் சொல்லாது. பயன் அனைத்தையும் கொடுக்கும் இயல்பு பழத்திற்குண்டு. பெற்றுக் கொள்ளும் இயல்பு வேரினுக்குண்டு.